

சிவகங்கை நாடாளுமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கார்த்தி சிதம்பரம் வெற்றி அடைந்ததின் பேரில் நன்றி உரை செலுத்துவதற்காக திருமயம் தொகுதியில் இளஞ்சாவூர் திருமயம் வி லட்சுமிபுரம் விராச்சிலை நற்சாந்துபட்டி பனையப்பட்டி குழிப்பிறை ஆகிய இடங்களில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் அழகு சிதம்பரம், ஆர். கணேசன் மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கட்சி உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி சார்பில் சிவகங்கை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரத்தை எம்.பி. அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ததற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக., புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மாங்காடு கடைவீதி பகுதியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நன்றி அறிவிப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்களிடையே நன்றி தெரிவித்து உரையாற்றினார்.



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தேவனூர் கிராமத்தில் முன்னாள் எம்.பி., எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க.கண்ணன், கு.சின்னப்பா, எஸ்.எஸ்.சிவகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மாலை அணிவித்து, மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்

### வரும் ஜூன் 25 ல் நாமக்கல் மாவட்ட

# மத்தியக் கூட்டுறவு வங்கியின் முதலாவது சிறப்பு பேரவைக் கூட்டம்!

## கே.ஆர்.என். இராஜேஷ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், ஜூன் 17-

வரும் ஜூன் 25 ல் நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் முதலாவது சிறப்பு பேரவைக் கூட்டம் நடைபெறும் என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முதன்மை அமைப்புத் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி நிர்வாகக்குழு கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி எம்.எல்.ஏ கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் அருளரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முதன்மை அமைப்புத் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் நாமக்கல் மாவட்டம் 1998 ஆம் ஆண்டு முதல் தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை கூட்டுறவு அமைப்புகள் அனைத்தும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தது. தற்போது கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் ஆகியோர் உத்தரவின் பேரில், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 3 மாதங்களுக்கு முன்பு, தனியாக அறிவிக்கப்பட்டது. தற்போது இந்த வங்கி தனியாக இயங்கும் வகையில் மத்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து நாமக்கல் வங்கிக்கான டெபாசிட்டுகள் மற்றும் கடன் கணக்குகள் பிரிக்கப்பட உள்ளது. இதற்கான வேலைகளை மேற்கொள்ள ஒரு குழு அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி அனுமதியைப் பெற்று தனியாக இயங்கும் வகையில் அனுமதி பெறுவதற்காக, வங்கியின் முதலாவது சிறப்பு பேரவைக் கூட்டம் வருகிற ஜூன் 25 ஆம் தேதி காலை 10:30 மணிக்கு, நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கி துவங்க அனுமதி அளித்த, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்படும். அனைத்து சட்டபூர்வமான பணிகள் முடிவடைந்தவுடன், தேவையான அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, இன்னும் 3 மாதத்தில் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனியாக செயல்படத் துவங்கும் இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் வங்கி இயக்குனர்கள்டாக்டர் ஆர்.மாயவன், அ.அசோக்குமார், வி.பி.ராணி, வி.கௌரி, ஆர். ஜோதிலட்சுமி, எஸ்.செல்வகுமார், பி.பாலசுப்ரமணியம், பி.நவலடி, எம்.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்!

**திருப்பூர், ஜூன் 17-**

**திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினையினை வெளியிட்டார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இலச்சினை வெளியிடப்பட்டு 30 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ்நாடு பல்வேறு விளையாட்டு களில் பெரும் முன்னேற்றம் அடைந்து வருவதால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தவும் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளை பிரிதிபலிக்கவும் தமிழ்நாட்டின் வரைபடத்தை உள்ளடக்கிய புதிய இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய இலச்சினையில் இடம்பெற்றிருக்கும் மஞ்சள் நிறம் ஆற்றல் மற்றும் விளையாட்டு ஆர்வத்தையும், நீல நிறம் சுதந்திரம் மற்றும் உத்வேகத்தை குறிக்கும் வகையிலும் இடம் பெற்றுள்ளது. மேலும் இலச்சினையைச் சுற்றி அமைந்துள்ள வட்ட வடிவம் தமிழ்நாடு விளையாட்டுத் துறை முன்னேற்றத்தின் சான்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கு.சுப்புராயன், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் பி.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே. செல்வராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே. மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சியர் திரு தா. கிறிஸ்துராஜ், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருமதி.கோ. மலர்விழி, சர்வதேச தடகள வீரர் ஒலிம்பியன் தருண் அய்யாசாமி, தேசிய தடகள வீராங்கனை செல்வி. ஆர். பிரவீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா – புகைப்படக் கண்காட்சி!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்- ஆர்.எஸ்.பாரதி -நிவேதா எம்.முருகன் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஜூன்17-

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்பட கண்காட்சி மயிலாடுதுறை தருமபுரம் கல்லூரியில் நாளை (18.6.2024 - செய்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு என் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தொடங்கப்பட உள்ளது. 18ம் தேதி தொடங்கி 22ம் தேதி வரை 5 நாட்கள் கழகத்தினர், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மணவிகள் பார்வையிடும் வகையில் புகைப்பட கலைஞர் கோவை சுப்பு தலைமையிலான குழுவினர்களால் உருவாக்கி தரப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்பட கண்காட்சி அரங்கத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தும், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா புகைப்பட கண்காட்சியை, சுற்றுசூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வி.மெய்யநாதன் திறந்து வைக்கிறார். இந் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நடாளுன்ற முன்னாள் உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

### ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

# தஞ்சை நாடாளுமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி -துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.- பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.- கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ பங்கேற்பு!

தஞ்சாவூர் ஜூன் 17.

இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் தஞ்சை நாடாளுமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் இன்று 17.06.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர் ஜெயராம் மஹாலில் நடைபெற உள்ளது.

செயல்வீரர்கள்கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ வரவேற்புரையாற்றுகிறார்.

பள்ளிகல்வித்துறை அமைச்சரும், தஞ்சாவூர் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அன்பில் மகேஸ்பொய்யாமொழி தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ் எஸ்.பழநிமாணிக்கம், எல். கணேசன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், கழக தணிக்கைக்குழு உறுப்பினர் ஏனாதி ப.பாலசுப்ரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம். இராமசந்திரன், பி.இராசமாணிக்கம், து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, கழக சட்ட திருத்தக்குழு உறுப்பினர் சி.இறைவன், தலைமைக் கழக நிர்வாகிகள் சு.ஞானசேகரன், த.காரல்மார்க்ஸ், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, மன்னை த.சோழராஜன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன் வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் து. கிருஷ்ணசாமி, எஸ்.எம். டி.துரைவேலன், டி.ஆர். லோகநாதன், பி.ஜி.ராஜேந்திரன், திராவிடர் கழகத்தை சேர்ந்த இரா.ஜெயக்குமார், சி.அமர்சிங், பெ.வீரையன், ஆர்.பி.எஸ்.சித்தார்தன், ம.தி.மு.க நிர்வாகிகள் வி.தமிழ்செல்வன், பா.பாலச்சந்திரன், சி.பி.ஐ.(எம்)நிர்வாகிகள் சின்னை பாண்டியன், ஜி.சுந்தரமூர்த்தி, கோ.நீலமேகம், சி.பி.ஐ கட்டி நிர்வாகிகள் முத்து.உத்திராபதி, மு.அ.பாரதி, வி.சி.க. நிர்வாகிகள் கே.ஜெயசங்கர், இடிமுரசு இலக்கணன், ச.தமிழன், க.ப.அரவிந்குமார், ஆ.வெற்றி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நிர்வாகிகள் எஸ்.எம்.ஜெயினுல் ஆபிதீன், முகைதீன் ஆடுமை, மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் ஐ.எம். பாதுஷா, எம்.அப்துல் மஜூது, எ.அப்துல் மாலிக், எம்.முஜீப்பூர் ரஹ்மான், தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிர்வாகிகள் த.பாபு, கே. பஷீர் அகமது, சீனி.செல்வம், மக்கள் ஜனநாயக கட்சி நிர்வாகிகள் வல்லம் நியாஸ்,அதிரை ஷேக், ஷேக் அப்துல்லா, மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் தர்ம சரவணன், எம். எஸ்.கண்ணன், எஸ்.ஜி. ரெங்கசாமி, ஆதிதமிழர் பேரவை பி.தியாகராஜன், ஆம் அம்திமி கட்சி எம். எஸ்.கே.சபீத், மூவேந்தர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், பி.பாலாசுண்டையார், மூவேந்தர் செல்வராஜ், எஸ்.கார்த்திகேயன், தமிழ்நாடு விஇதொ.க. எ. ஆரோக்கிய சாமி மற்றும் தலைமைக் கழக தொகுதி பார்வையாளர்கள் துரை. கி.சரவணன், அக்ரி. கே.பி. டி.கணேசன், இரா.சங்கர், சி.வீரகணேசன், சுப.சரவணன், நாகை மனோகரன், ஆகியோர் சொற்பொழிவாற்ற உள்ளனர்.

தஞ்சை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி வெற்றி பெற உழைத்த அனைத்து செயல் வீரர்களுக்கும் நன்றி தெரிவித்து தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி உரையாற்ற உள்ளனார்.

கூட்ட முடிவில் தஞ்சை மாநகராட்சி செயலாளரும், மேயருமான சண்.இராமநாதன் நன்றியுரையாற்றுகிறார்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள தஞ்சை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.



நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுக் கூட்டம் வங்கித் தலைவர் கே.ஆர்.என். இராஜேஷ்குமார் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இதில் பொன்னுசாமி எம்.எல்.ஏ. உள்ளிட்ட வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ் , மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் காணை தெற்கு ஒன்றியம், காணை வடக்கு ஒன்றியம் , காணை மத்திய ஒன்றியம், விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், விக்கிரவாண்டி பேரூர் ஆகிய பகுதி நிர்வாகிகளை சந்தித்து ஆதரவை திரட்டினார். ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு ராஜா, ஆர் முருகன், ஆர்.பி. முருகன், வேம்பி ரவி, ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், பேரூர் செயலாளர் நைனா முகமது, ஒன்றிய குழுத் தலைவர்கள் கலைச்செல்வி, சங்கீதா அரசி ரவிதுரை, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், துணைத்தலைவர் பாலாஜி, விவசாய அணி பாபு ஜீவானந்தம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை முன்னாள் எம்.பி. க.வீரையாவின்

# வளர்ப்பு மகள் திருமதி மாதவி மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி

புதுக்கோட்டை, ஜூன் 17-

புதுக்கோட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.வீரையாவின் வளர்ப்பு மகளும், முன்னாள் தி.மு.க. மாவட்ட செயலாளர் க.சிதம்பரத்தின் மகளுமான, ஹோன்டா ஷோரூம் உரிமையாளர் சி.ஆசைத்தம்பி அவர்களின் சகோதரியும்,



புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.இராமகிருஷ்ணன் அவர்களின் மனைவி, ராணி அவர்களின் அக்காவும், மனமேல்குடி மருத்துவர் பி.இளமாறன் மனைவி மாதவி உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

அவரது இறுதி ஊர்வலம் நேற்று (16.6.2024) மாலை 4.30.மணியளவில் மனமேல்குடி அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. கழகத்தினர், உறவினர்கள் நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு மாநகரம் கிருஷ்ணம்பாளையம் காலனியில் உள்ள 300 பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், மற்றும் இனிப்புகளை மாவட்ட கழக பொருளாளர் பக.பழனிச்சாமி வழங்கினார். நிகழ்வில் வீரமணி ஜெயக்குமார், பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன், அன்பழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.